REGD No M 4642

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

லர் 10. | 26-8-51 | இதழ் 9.

ஜாரைத் தோற்கடித்தார் நேரு

ளம் முழங்கிற்று! வாத்தியங் இன்னிசை வழங்கின.

லங்கார உடையணிந்து அந்த ழகி புறப்பட்டாள்! அவள் று மணக்கோலத்தில் நின்று ண்டிருந்தாள்!

ஞல் அவள் உடன் நின்றவர் ா கண்கலங்கினர்! மனங்குழம் றனர்!

வர்களைக் கண்ட மணமகளோ ா செய்வதென்று தெரியாது கிஞள்! மனமாழ்கிஞள்!

கம்புவதா, திகைப்பதா, திரு வென விழிப்பதா என்று ளை ஒருமுடிவுக்கு வரவிட ல, அவளது நிலை!

வள் மணம் முடிக்க ட்ரான்ஸ் க்குப் போகவேண்டும்! அங்கு மணமகன் வீடிருக்கிறது.

வள் ரயிலேறவில்லை! உள்ளங் றிஞள்!

டிந்தால் திருமணம்! புறப்பட போகவேண்டும்! ஆஞல் அவள் ம் நிலையிலிருக்கிருள்! வீட் ரா, விழிகளிலே நீரைத்தேக்கு றனர்! அவர் தம்மொழிகளிலே, ாபத்தை குழைக்கின்றனர்!

ணம் முடிக்க அவன் தனித்தே ன் செய்யவேண்டும்! உறவினர் ரும் உடன் போகக்கூடாது!

அதஞல்தான் மணமகளைச்சுற்றி ந்தோர் தேம்பினர்!

சமூக கட்டுப்பாட்டால்தான் இந்த சஞ்சலம் என்று எண்ண வேண்டாம்—சர்க்கார் தரும் சங்கடம் இது!

ஆட்சியாளர் செய்யும் இந்த அலங்கோலத்தைக் கண்டால், அந்த மணமகளைப்போல, நாமும் மயக்கமடையத்தான் வேண்டும்!

தென் ஆப்ரிக்காவில் மலான் சர்க்கார், நம் நாட்டவருக்கு இழைத்து வரும் இன்னல்கள், மின்னலைப் போலத்தோன்றி மறையக்கூடியன அல்ல. அழியாத ஆருத புண்ணை ஏற்படுத்தக்கூடியன!

அதிலே ஒன்றுதான் மணமகளை, மற்றவர்கள் தொடர்ந்து உடன் செல்லக்கூடாது என்ற தடையும்!

இந்த மணவேதனையைக்கேட்டும் மனவேதனையால் பிணமாகாமலிருக்கிருேம், இன்னமும்!

நிறவெறிகொண்ட மலான் சர்க்கார் இத்தகைய தகாத சட்டமிட்டு, நம் நாட்டோர் இதயத்தைக் கீறிப் புண்ணுக்கி, பூரிக்கிறது!

* * *

தென் ஆப்ரிக்காவில் மட்டுமல்ல' இத்தகைய கொடுமைகள் கூத்தாடுவது, ஜகமெங்கும் உள்ளன!

ஆள்வோர் நடந்து செல்லும் அக்கிரமப்பாதை, வரலாற்று ஏடுகளை, புரட்டியோருக்குப் புரியாமல் போகாது.

களவாடச் செல்பவன், குறிப்பிட்ட வீட்டையடைந்ததும், கன்னக்கோல் தேடுகிருன், பதிலைத் துளைக்க!

சாளரங்களின் வழியே செல்லப் பார்க்கிருன், சில்சமயங்களில்!

கதவுகளைப் பிளந்து தள்ளுகிருன், இன்னும் சில சந்தர்ப்பங்களில்!

உளவால், உள்தாழ்ப்பாளை ஆள் வைத்து திறப்பதும் உண்டு, வேறு சிலநேரங்களில்!

அவன் செல்வது திருட— அதற்கு இப்படிப் பல முறைகளில் முயற்சி செய்கிருன் கள்ளன்.

கன்னக்கோல் வைக்கிருன்! சாளரங்கள் வழியே தாவுகிருன்! கதவுகளை உடைக்கிருன்! தாழ்ப்பாளைத் தளுக்காகத் தள்ளுகிருன்! எல்லாம் கள்ளத்தனம் செய்யத்தான்!

மாடிவீட்டைக் கண்டால்தான், திருடன் இப்படிப் பலவழிகளில் முயற்சி செய்கிருன். இப்படிப் பல முறைகளில் ஏதேனும் ஒரு முறை உபயோகப்படுத்தி பலன் பெறலாம் எனப்பார்க்கிருன்!

அதுவும், மாடிவீடு, அவன் கவனத்தையும், கருத்தையும் பறிக்கக் கூடிய அளவு செல்வம் செழித்

தோர் வாழுமிடமாக இருக்கவேண்டும்.

அப்படித்தான், எதேச்சாதிகார ஆட்சியில், நாட்டின் தலைவர்கள் வேட்டையாடப்பட்டிருக்கிறார்கள்!

இலட்சிய வீரர்களை ஒருமுறையிலல்ல, பலவழிகளில் அடக்கப் பார்த்திருக்கிறது, ஆணவஆட்சி.

சிலரை,நாட்டிலிருப்பதே ஆபத்து என நாடு கடத்தியிருக்கின்றனர்.

இன்னும் சிலரை நாட்டிலேஉலவுவது கூடாதுஎனகூட்டிலேஅடைத்திருக்கின்றனர்.

சிலர் பேசக்கூடாது என்று தடுக்கப்பட்டுள்ளனர். சிலர் பேனாஅசையக்கூடாது என்று பேசியிருக்கிறார்கள்.

சிலரைக் கூட்டங்களுக்குப் போகக் கூடாதெனத் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர்!

இப்படி, வழிபல கண்டுள்ளனர், நாட்டுக்கு வாழ்வளிப்போரை வாட்டி, வதைக்க!

ஆனால், இத்தனைக்கும் தப்பித்தான் அவர்கள், உலக வரலாற்றிலே, தாங்கள் எண்ணியதை முடித்து, நமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளனர்!

கன்னக்கோல் வைத்து, சுவற்றைத் துளைத்து, சாளரத்தில் வழியே நுழைந்து, பெட்டிக்கதவை உடைக்கும் பொழுதே பிடிபடுகிற கள்ளனைப் போல, எதேச்சாதிகாரிகளைப் பிடித்துக் கொடுத்துள்ளனர் அவர்கள்.

செல்வம், கள்ளர்கள் கையில் சிக்காமல் போகச் செய்தது மட்டுமல்ல, அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து, கூண்டிலேற்றி, விசாரித்துத் தண்டனையும் வாங்கித் தந்துள்ளனர்.

அவர்களை அடக்கத்தான், ஆயிரம் வழிகளில் ஆணவ ஆட்சி, முயற்சி செய்து, முகாரி பாடிற்று, கடைசியில்!

இதனை, வரலாற்று ஏடு கூறுகிறது — கருத்துள்ளோர் கண்டு தெளியட்டும்.

பாட்டாளிகள் படுந்துயர் கண்டு பதைத்தான்.

அவர்கள் கண்ணீர்த் துடைப்பதே தன் வாழ்வின் இலட்சியம் என இடி முழக்கம் செய்தான்.

ரஷ்ய மண்ணிலே பிறந்த எவரும், கஷ்டப்படுவதைக் காண நான் சகியேன் எனக் கூவினான்!

அவன் பேச்சு எரிமலை வெடிப்பாகவே இருந்தது, ஜாரின் கண்களுக்கு!

அவன் செயல், கொந்தளிக்கும் கடலெனவே கருதினான், அந்த வாலிப வீரன் லெனின், பாட்டாளி மக்களுக்கு வாழ்வளிக்க, படை திரட்டிய பொழுது!

கி. பி. 1885ம் ஆண்டு லெனின், பாட்டாளித் துயர் நீக்கும் கழகம் துவக்கினான்.

ஜாரோ, அடக்குமுறை அம்புகளில் மிகக் கூர்மை வாய்ந்த அம்பாகத் தேடிக் கண்டு பிடித்தான்!

வீசினான்! விரட்டினான்! அவனும் பிறகு அதனாலேயே வேதனைப் பட்டான்!

ரஷ்யாவில் லெனின் இருப்பதே, வெடி மருந்துச் சாலையிலே நெருப்பு இருப்பது போல என்று கூறி நாடு கடத்தினான்.

வீரனை விரட்டினான்! அவன் தன் வீண் வெறியாட்டத்தைப் பரப்பினான்!

சைபீரியா பனிக்காடுகளுக்கு அனுப்பப்பட்டான்.

லெனின் மட்டுமல்ல, ஜாரின் புன்னகை பெறாதோர் பலர் அப்பனி வயலிலே தான் திரிந்து வந்தனர்.

பனிக்காட்டிலே தான் லெனின் பாட்டாளிப் போருக்கு திட்டம் தீட்டினான்!

தன்னைப் போல, நாடு கடத்தப்பட்டோரையுப்கண்டான். நாட்டின் நிலையைக் கூறிப் புலம்பினான். அவர்களும் அவன் காட்டிய வழிநடக்க ஒப்பினர்!

புனல் வழிந்த கண்களில், அனலைத் திரட்டிக் காட்டினான் லெனின்.

பனிக் காட்டிலே, அவன் பவனி வந்தான். அந்தப் பவனியே, இந்த அவனியே கண்டு வியக்கும் புரட்சிக்கு, அடிப்படையாயிற்று!

ஐந்தாண்டுகள் சைபீரியாவிலேயே இருந்தான்!

ஓயாது, உழைத்தான், அதன் பலன், இன்று பொதுவுடைமை பூங்காவாக, ரஷ்யா விளங்குகிறது!

நாடு கடத்துவது தண்
யென்றுகருதித்தான் ஜார் லெ
சைபீரியாவுக்கு விரட்டினான்.

கி. பி. 1900ல் அவன் ப
விட்டுப் புறப்பட்டான்.

பிறகும் அவன் சொந்த
ணிலே, சுகமுடன் வாழவிட

பாரிஸில், லண்டனில், ஸ்வி
லாந்தில் என்று இப்படி அ
படியே இருந்தான்.

அந்த நாடு கடத்தப்பட்
தான், நாட்டையே, தன் நா அ
படி ஆட்டுவிக்கும் சக்தி படை
ஞனன்!

அந்த மாவீரனை, நாடு கட
மமதையாளன் ஜார் தான்
தான்.

பனிக்காட்டுக்கு விரட்டி
பட்டாளித் தலைவன் லெ
எதிர்த்துக் கேட்டோரை பி
ஞன். அதனால் நாட்டி
பெரும் பாலானோரின் ப
வெறுப்பையும் திரட்டினான்!
மண்ணிலே சுருட்டிக் கொ
விழுந்தான், புழுபோல!

லெனின் வாழ்விலே மட்டு
இந்த நாடு கடத்தும் தண்ட
நாம் பார்ப்பது!

நாட்டுக்குத் தொண்டு செ
போகிறோம் என்று தங்களை
பணிக்க வந்தவர்கள் பலரின்
விலே, இந்தப் பகுதி உண்டு!

இந்த நாடு கடத்தும், நாசக
தண்டனைக்கு, அவனியிலே,
மாயிரம் உதாரணங்கள் காட்ட

ரஷ்ய ஏகாதிபத்தியத்
லெனின் அனுபவித்தார் அ
கொடுமையை!

அதுபோலக் கொடுமை அ
வித்தவர்கள் பட்டியல்,மிகப்பெ
இவ்வுலகில்!

* * *

ஏகாதிபத்திய விஷத்தைக்
துக் கும்மாளம் போட்ட, எ
சாதிகாரிகள், நாட்டு நலந்தேடி
அடக்க கையாண்ட முறைகள்

அவைகளில் முக்கிய மான
குறிப்பிடக் கூடியவை இரண்டு

சிலரை நாட்டை விட்
விரட்டுகிறார்கள்

சிலரை நாட்டை விட்டு வெ
யில் செல்ல விடுவதில்லை.

ர் நாட்டிலிருப்பதால்ஆபத்து, வுஞ்சிலர் வெளி நாடுகளுக்குப் புது ஆபத்து!

த ஆபத்திற்கு மாற்றுமருந்து நடத்துவதும், நாட்டைவிட்டு ச்செல்லக்கூடாதென தடுத்து த்துவதுமே மார்க்கமெனக் கின்றனர், சர்வாதிகார யில்!

துவும், இந்திய ஏகாதிபத்தி ல் இந்தக் கொடுமையைப் கிறபொழுது நாம் அனலில் போலத் துடிக்கிறோம்.

வெள்ளையர்கள் இந்த நாட்டை, ளின் சுரண்டல் பூமியாக வைத் ந்தபொழுது, இப்பொழுதுஆள் கள் கூவிய கூச்சல், இன்னமும் ளின் செவிகளில் ரீங்காரமிட்ட ந் தானுள்ளது!

வர்கள் காலத்தில், சுதந்திரப் ர் நடத்திய பலரை நாட்டை டோட்டியிருக்கின்றனர்.

ங்கம்தந்த சிங்கங்கள் பல, இந்த ட்டிஷாரின் கொடுமைத் தீயிலே ின!

ட்டால், சுதந்திர நாதத்தை ள் நரம்புகளிலே மீட்டிக் காட் பாரதியார் புதுவை போனதை கள் மறக்கவில்லை.

அண்மையில் ஆவிபிரிந்த அரவிந் ஆசிரமவாசியாகுவதற்கு அடிப் டக் காரணம் அறியாதோரில்லை.

அந்தமான் தீவுகளையே, இந்த க்கிரம காரியத்திற்காக வைத்தி தனர்.

கி. பி. 1858 வரை, அது குற்ற ளி புரமாகவே இருந்தது!

இப்பொழுதுதான் அதிலே, மக் ள குடியேற்றுவித்து, அவர் ருக்கு, நிலமும், பணமும் காடுத்து புதுவாழ்வு பிறக்கச் செய்யலாம் என்று முயற்சியெடுத் ள்ளனர்.

நாடு கடத்திடும் தண்டனையை வள்ளை வெறியர்கள் ஆண்ட ரத்தில் அள்ளி வீசினர்.

இன்று ஆட்சியிலே உள்ள ஆள ந்தவர்களோ தாண்டிக் குதித் னர்! கண்டன மழையே பெய்த ர், அன்று!

நாடு கடத்துவது, நாம்மட்டு ல்லை, நல்லாட்சி விரும்புவோர் வரும் ஏற்க முடியாத திட்டம்!

தி. மு. கழக இரண்டாம் ஆண்டு
தனி மலர்

—※—

23-9-51-ல் வெளிவருகிறது.

★

திராவிட நாடு பொறிக்கப்பட்டுள்ள மெடலை தாங்கியிருக்கும் கழகக் கொடி முகப்பை அலங்கரிக்கிறது.

★

சி. என். ஏ. தீட்டிய நன்கோடை எனும் அரசியல் நாடகம் கருத்துக்கு விருந்தளிக்கிறது.

★

'மனிதன் எதனால் உயர்ந்தவன்?' என்று விளக்குகிறார், சாமி கைவல்யம்.

★

கழகம், இவ்வாண்டு அன்றாடம் செய்த பணிகளை, தேதிவாரியாகத் தெரிய உதவி செய்கிறது, கழகக் காலண்டர்.

★

பொதுச் செயலாளர் கழகந் தொடங்கிய பிறகு சென்றுள்ள பொதுக்கூட்ட விபரம் தொகுத்துத் தரப்படுகிறது.

★

கழகம் பற்றிய பல விவரங்களைத் திரட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

★

இன்னும் கதை, கட்டுரை, கவிதைகள் மலரை அலங்கரிக்கின்றன.

இப்பொழுது அனுப்பப்படும் பிரதிகளின் எண்ணிக்கையே ஏஜண்டுகளுக்கு அனுப்பப்படும்.

விலை அணா எட்டு.

இதைவிடக் கொடுமையானது, இன்னொரு நாட்டுக்குப் போவதைத் தடுப்பது!

இரண்டும் கொடுந் தண்டனைகள்! கொடுமையின் அளவில் ஒன்றையொன்று மிஞ்சக் கூடியவை!

ஒன்று தீ, மற்றொன்று பெரு வெள்ளம்!

தீயில் இறங்கினால் பொசுங்கிப் போவர். வெள்ளத்தில் மூழ்கினால் அமிழ்ந்துபோவர்.

ஆனால் இரண்டிலும் சாவுகிடைப்பது மட்டும் நிச்சயம்!

ஆகவே, இரண்டு தண்டனைகளையும் எவரும் ஒப்பார்.

* * *

இந்திய ஆட்சியிலே, நாம் காண்கிறோம் இந்தக் கொடுமைகளை!

நாடு கடத்தினாலாவது, நிம்மதி கிடைக்கும்!

ஆனால் இவர்கள் பிறநாடு செல்கிறோம் என்று அனுமதி வேண்டியவர்களுக்கு அனுமதி மறுத்து விட்டனர்.

ஜார் கையாண்ட முறையைக்கூட ஒப்பலாம்! ஆனால் பிரதமர் நேரு, கடைபிடித்த முறையை நாம் ஏற்க முடியவில்லை.

ஜாரைத் தோற்கடிக்கிறார் நேரு. இதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை, நம்மால்.

ஜாரை நல்லவராக்குகிறார், இந்தியப் பிரதமர் நேரு.

ஜார், லெனினை நாடுகடத்தினான். அதைக் கண்டு நாம் வியப்படையவில்லை.

ஏனெனில் அவன் எதேச்சாதிகாரி.

மதுவும், மாதுவுமே, மாநிலத்திலே தனக்கு மகத்துவமளிப்பவை

என எண்ணிக் கிடந்த மமதையாளன்.

சீமான்களிடையே இருந்து சிறுமதியினர் போதனைகளைக் கேட்டு நாட்டையே, கேடுகளின் கோட்டையாக்கிய கோமாளி அவன்.

குங்குமநிற அதரங்களே, அவனுக்குக். குல தெய்வமாகிவிட்டன!

அவர் கொஞ்சு மொழிகளே, சட்டங்கள்!

அவர்தம் குலுக்கு நடையே, ஆட்சி முறை!

இப்படி, போக போக்கியங்களில் புரண்டுகிடந்த புல்லன் அவன். ஆகவே அவன் நாடு கடத்தினாலும், தூக்கு மேடைக்குத் தூக்கியடித்தாலும் நாம் ஆச்சர்யப்படமாட்டோம்.

ஆனால் நேரு, ஜாரல்லவே! அவர் நாட்டு மக்களின் இதயத் துடிப்புகளை அறிந்தவர்.

அவர், இந்திய மக்களின் எண்ணங்களைப் புரிந்தவர்.

அவர் மக்கள் தலைவரே தவிர, மதோன்மத்தர்கள் வழிவந்தவரல்ல!

அவர் பொதுவாழ்க்கைத் தோட்டத்து புத்தம் புதிய ரோஜா! எதேச்சாதிகார புதருக்கிடையே முளைத்துள்ள கள்ளியல்ல!

அவர் மக்கள், தங்களின் துயர் துடைக்கும் மகான் எனக் கொண்டாடும் நிலை பெற்றவர்.

காந்தியின் வாரிசு என்று பேசி, தேய்ந்த வாழ்வினரும், ஒரு தெய்பு தேடுகின்றனர்.

அவர்கள் ஆட்சிபீடமேறுமுன் தித்திக்கும் மொழி பேசினர். அதற்குத் தலைமை வகித்தார் நேரு.

அத்தகைய நேரு, ஜாராகிடும் போக்கைக் காணவும் நாணுகிறது மனம், நடுங்குகிறது உடல்!

நேரு, ஜாராகக்கூட ஆகவில்லை. ஜாரை மிஞ்சுகிறார், தோற்கடிக்கிறார்! இதனைக் காணும் நல்லவர் நெஞ்சு வெடித்துவிடும்!

அக்கா ஊமை, தங்கை பைத்தியம்! ஊமையை மணந்தவனையே மேலெனலாம். பைத்தியத்தைக் கட்டிக் கொண்டு எவன் தினமும், அடியும் இடியும் படுவது!

நாடு கடத்துவதையாவது தாங்கிக் கொள்ள முடியும்—ஆனால், பிற நாடு செல்வதைத் தடுப்பதை சகிக்க முடியாது!

அதுவும், அதனை ஜார் செய்யலாம். பொறுத்துக்கொள்ள முடியும்! நேரு செய்கிற பொழுதுதான் நெஞ்சு வேகிறது!

கோட்டானிடம் குரலினிமை நாம் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் குயில், கோட்டான் போலக் கூவினால், நாம் என் செய்வது!

ஜார், நாடு கடத்தலாம், ஏனெனில், அவன் அதைத்தான் செய்வான், செய்யத்தெரியும் அவனுக்கு அவன் எதேச்சாதிகாரியாதலால்!

ஆனால்நேருவிடம் எதிர்பார்த்தது குயிலிடம் எதிர்பார்த்ததுபோல!

நேருவை நாம் குயிலென எண்ணியிருக்கும்பொழுது அவர் கோட்டான் குரல் எழுப்பினால் எப்படி நாம் வியப்பால் மூர்ச்சையடையாமலிருக்கமுடியும்!

பாம்பு கடிக்கும் — அதனால் சாவும் நம்மைத் தழுவும்.

ஆனால் பச்சைக்கிளி கொத்தி, செத்திடும் நிலை பிறந்தால் என் செய்வது!

நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக நடக்கும்பொழுதுதான் நாம் வியப்படைகிறோம், வேதனைப்படுகிறோம்.

நேரு, குயிலுமில்லை, பச்சைக்கிளியுமில்லை! அவர் கோட்டானாகிறார் குரலில், பச்சைப்பாம்பாகிவிட்டார் குணத்தில் என்று கூறிடத் தோன்றுகிறது!

* * *

ரஷ்யா, இந்தியநாட்டிலுள்ள சிலருக்கு அழைப்புஅனுப்பியிருந்தது.

அழைப்புப்பெற்றவர்களில்எழுத்தாளர்கள், கலைஞர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இன்னும் பல திறத்தினர் இருக்கின்றனர்.

இவர்கள் ரஷ்யா செல்ல அனுமதி கோரியிருந்தனர்.

இது குறித்து சென்ற திங்களில் நேரு குறிப்பிட்டுள்ள செய்தியை இன்னமும் நினைவில் கொண்டுள்ளோர் நிச்சயம் வேதனைப்படுவர்.

முப்பத்தொன்பது பேர் ரஷ்யா செல்ல அனுமதி கோரியிருந்தனர்.

இதில் முப்பதுபேர்கள் செய்யலாமென அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதில் சிலர் அரசாங்க ஊ... களுமிருக்கிறார்கள். அவர்கள் ... மனை அனுமதித்தால் போகல...

ஆனால், ராஜ்ய சர்க்கார்கள்... முடிவு செய்யவேண்டும்.

சிலருக்கு அனுமதியளிக்கவி... அவர்களுக்கு முன்னாள் நட... கைகளைப்பொறுத்தே அனுமதி... கப்பட்டிருக்கிறது!

இதனை நேரு குறிப்பிட்டுள்... தன்நாட்டிலுள்ளோரை ர... செல்ல அனுமதிக்கவில்லை.

11-ம் பக்கம் பார்க்க

★ தேன் துளி

திக்கெட்டும் பரவி வருகி... நமது கழகம். எங்கெங்கு திரா... மக்கள் இருக்கிறார்களோ அங்... லாம் நமது எண்ணங்கள் மு... கொட்டுகின்றன. இலங்கைத்... பர்மிய தேசம், மலேய தீபகற்... இந்தோ சீனம் முதலிய க... கடந்த தேசங்களிலெல்லாம் ... கிடக்கும் உடைந்த சமுதாயத்... திருவிளக்குகள், நமது கழகத்... கொண்டிருக்கும் ஆசையும் ... மும், அங்கிருந்து வரும் கடிதங்... மூலம் நமக்குத் தெரிகிறது. அ... செய்திகள் — நமது உழைப்... ஊக்குவிக்கும் தேன் துளிக... கடல் கடந்த பிற நாடுகளில் ம... மல்ல, இந்தியத்துணைக்கண்டத்... பிறமாகாணங்களில்சென்று உ... போராக இருக்கும் நமது இ... தோழர்கள், அடிக்கடி தங்க... ஆர்வத்தை இங்கு வரும்போ... நேரிலும், அடிக்கடி தகவல்கள்... வதன் மூலமும் நமது இதயத்... இன்பத்தில் ஆழ்த்தி வருகின்ற...

இப்போது, நமது மாநில மா... குறித்து அறிந்ததும் ஆமதாபா... லிருந்து ரூ 150 நன்கொடை... அனுப்பியுள்ளனர், ஆமதாப... நகர திராவிட முன்னேற்றக் கழ... தின் சார்பில்.

இந்த நன்கொடை, நமது கழ... காளைகள் எங்கிருந்தாலும், ப... புரிவர் என்பதற்கோர் எடுத்... காட்டு. அவர்கள் முயற்சியை... எழுச்சியையும் பாராட்டுகிறே... விரைவில் உதயமாகும், ... விடுதலைக் கிளர்ச்சிக்கு அவர்... சேவை பயன் படும் என்ப... விளக்கும் — தேன்துளிச் சம்ப... இது.

விஷக் கோப்பை

★

சொக்க வைக்கும் சொகுசுக் கண்ணைச் சுழற்றி, கற்கண்டு மொழியைச் சிந்தி, தங்கமேனியைத் தகதகவென மின்னச் செய்து, அவள் தருகிறாள் கோப்பை!

கோப்பையிலே இருப்பது விஷம்! ஆனால் ஆடிய ஆட்டமும், பாடிய பாட்டும், உள்ளத்தையே கொள்ளை கொண்டு விட்டன!

விஷத்தை அருந்தச் சொல்கிறாள், வேல் விழியைக் காட்டி!

அந்த விஷக் கன்னியும் வெட்கிடும் முறையில், அவர் பேசியிருக்கிறார்.

அவர் சாதாரணமானவரல்ல—திவானாக இருந்தவர்.

மாஜி சமஸ்தானாதிபதிதான், அத்தனைய மயக்கமூட்டி, விஷம் அருந்தச் சொல்கிறார்.

அவர் பட்டம் பெற்றவர். வழக்கறிஞராக வாழ்வு தொடங்கியவர்.

ஆட்சி மன்றத்தின் பதவிகளிலே பலவற்றின் சுவையும், பயனும் உணர்ந்தவர்.

இறுதியில் திருவனந்தபுரம் அரச பரம்பரையின் அன்புக்கும், ஆதரவுக்கும் பாத்திரமானவர்.

சச்சிவோத்தமர் என, கேரள நாட்டாரால் அழைக்கப்பட்டவர்.

வேதிய வேந்தர், சாணக்கிய சந்ததியினர்!

சர்.சி.பி.ராமசாமி தான் விஷ மாத்திரை தருகிறார். ஆனால் சர்க்கரைத் தடவுகிறார்.

இந்த விஷ வியாபாரம் நடந்த இடம், உதகை!

இந்திய சர்க்காரின் போக்கைத் தாக்குவதாக பாவனை காட்டி, செல்லத் தட்டு தட்டினார், அவர்!

மதச் சார்பற்ற சர்க்கார் தான் இந்தியாவை ஆள்கிறது என்று குறிப்பிடுகிறார்களே, இதன்படி இந்திய சர்க்கார் நடக்கத் தவறுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

மதச் சார்பற்ற சர்க்கார் என்று பேசிடுவோர், மதச் சார்போடு நடந்திடலாமா என்று கடிந்து கொள்கிறார்.

இதைக்கண்டு, நாம் ஆகா, சி–பி, சிந்திய பொன் மொழிகள் பாரீர் என்று கூவிடமாட்டோம். ஏனெனில் அவர் யார் என்பது நமக்கு நன்றாகத் தெரியும்!

இந்திய சர்க்கார் மதச் சார்பற்ற சர்க்கார் என்று கூறிக் கொண்டு, சோமநாதபுரஆலயத்திருப்பணியிலே, ஆட்சியாளர் கலந்து கொண்டது அருவருக்கத்தக்கது என்கிறார்.

அந்த விழாவில் நாட்டின் தலைவர் ராஜேந்திரர் கலந்து கொண்டார்.

இதனைத்தான் நினைவில் வைத்துக்கொண்டு சர். சி. பி. கூறுகிறார்.

சோமநாதர் ஆலயத் திருப்பணிக்கு, ராஜேந்திரர் போனது தவறு என்று சர். சி. பி. கூறுகிறாரே, இது எத்தனை பாராட்டுக்குரியது என்று நாம் ஆடவில்லை, பாடவில்லை!

ஆம், விஷக்கன்னியின் நடனம் இப்போது நடைபெறுகிறது! இனிமேல் நிச்சயமாக விஷக் கோப்பை தரப்படும் என்று நாம் அறிவோமாதலால்!

அவ்வளவு தந்திரமாக அவர், தம் குல குணத்தினைக் காட்டியிருக்கிறார்!

தாம் கூறநினைக்கும் விஷயத்தைக் கூறுவதற்கு முன்னால், எவ்வளவு அரிய முன்னுரை தீட்டியிருக்கிறார்!

சக்கிரவியூகம் வகுத்தல்லவா, வேலை செய்கிறார், சர். சி. பி.

நஞ்சு கொடுப்பதற்கு முன்னால், அந்த நளினி நயனங்களால் மயக்கிடுவதுபோல, சர். சி. பி. பேசியிருக்கிறார்.

அடுத்துச்சொல்லியுள்ளதுதான், அவர் நாட்டுக்குத்தரும் விஷக் கோப்பை.

சோமநாதர் ஆலயத்தில், ஆட்சியாளர் கலந்துகொள்வது போலத்தானும், இந்துமத சீர்திருத்த தொகுப்புச் சட்டமும் என்கிறாரே அதுதான், அவருக்கும், அவர் வழிவந்தோருக்கும் உள்ள தனியான பண்பு! தரணியுள்ளோர் கண்டு வியப்பதும், பயப்படுவதும் அதுதான்!

சோமநாதர் ஆலயத்தைக் குறிப்பிடுகையில் விரிந்தமுகம், இந்துமத சீர்திருத்த சட்டத்தையும் அவர் அத்துடன் இணைத்தவுடன் சுருங்கி விடுகிறது!

இந்த சட்டம், நாட்டிலே பெரிய வாதத்தையே கிளப்பிவிட்டிருக்கிறது என்கிறார் அவர். எந்தத்திட்டமும், நாட்டிலும், சபையிலும் பெரிய வாதத்திற்குப் பின்னே சட்டமாக்கப்படுவதுதான் நல்லது! இதனை அவர் அறியாதவரல்ல! இருந்தும், தெரிவிக்கிறார் அவர். எனவேதான் இங்கு பயங்கரம் தொடங்குகிறது என்று அர்த்தம்!

அந்தச் சட்டம், இந்துக்களின் மத எண்ணத்தை புண்படுத்துகிறது.

இந்த விஷத்தைக் கொடுக்கத்தான் அவர் சுற்றிவந்தார்.

கடைக்கண் வீச்சு, கனிமொழிப் பேச்சு, அந்தப்பாஷாண பாவைக்கு ஏன் வந்தது தெரியுமோ, விஷத்தை எப்படியும் விருந்தாக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தால்தான்!

பொதுவாக இந்துமத மாசுகளைப் போக்க ஒரு அளவிற்கு உதவி செய்யும். குறிப்பாக பெண்ணுரிமைக்கு வழி வகுக்கும் இந்தச் சட்டம்.

இது கருவிலே இருக்கும் பொழுதிலிருந்து, சர். சி. பி. யின் சந்ததியினர் சிதைத்துவிட முயற்சி செய்தனர்.

அம்பேத்காருக்கு, உதவியாக, தென்னாட்டார் இருக்கின்றனர் என்பதை எடுத்துக்காட்ட, திராவிட முன்னேற்றக் கழகத்தினர், தீர்மானங்கள் நிறைவேற்றியனுப்பினர்.

சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டிலேயும் இது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆகவேதான், விஷக் கோப்பையேந்தி நிற்கும் வேல்விழி சர். சி. பி. என்கிறோம்.

✲

திராவிடநாடு

ஞாயிறு] 26—8—51 [காஞ்சி

அரிசியியல்

அரிசி நிலை மிகவும் மோசமாக இருக்கிறது.

இந்த ஆண்டு 10,54,140 டன் கொள்முதல் செய்யப்படவேண்டும். இப்பொழுது 6,74,829 டன் தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

இனி, கொள்முதல் செய்வது மிகவும் கடினந்தான். கோதாவரியிலே வெள்ளம், மலபாரிலே விளைவு மந்தம், தமிழகத்திலேயும் நிலை மோசந்தான் என்று முகாரி கேட்கிறது.

1952 தொடங்கும் பொழுது, அரிசி கையிருப்பு மிகக் குறைவாகவே இருக்கும். முதலில் 9,50,000 டன் அரிசி கையிருப்பு இருந்தது. பிறகு 1,00,000 டன்னுக் குறைந்தது. இன்றுள்ள நிலையில் 50000 டன் இருப்பதே நிச்சயமில்லை.

இந்நிலையில் ஆறு அவுன்ஸ் அரிசி ரேஷன் தொடர்ந்து கொடுத்து வர முயற்சி யெடுத்துக் கொள்ளப் பட்டாலும், அரிசி தேவை அதிகரிக்கத்தான் செய்யும்.

அத்தகை சூழ்நிலையில் இதர தான்யங்களைக் கொடுத்துத் தான் சமாளிக்க வேண்டும்.

இப்படி முகாரி இசைத்திருக்கிறார்கள், சென்னை மாகாண சிவில் சப்ளை அதிகாரிகள்.

அவர்கள் எழுப்பிய அவல ஓலத்தின் எதிரொலி தான் மேல் காட்டியுள்ளவை.

சென்னை மாகாணத்தின் அரசியலையே புரட்டித்தள்ளி வருகிறது, அரிசியியல்!

இந்த அரிசியியலின் அரிச்சுவடி கூடப் புரியாதவர்கள், ஏதேதோ பேசி, இன்று சிக்கலை வளர்த்து விட்டனர்!

எந்த இயலுக்கும் அரிசியியல் அடிப்படையானது.

அந்த இயல் தான், வயிற்றியலுக்கு வழி வகுப்பது—வயிற்றியல் முடிந்தால் தான் அரசியல், பொருளியல், சமூகவியல் எல்லாம் முடியும்!

ஆகவேதான் அரசியலில் அரிசியியல் மிக மிக முக்கியமானது.

இது குறித்து சிவில் சப்ளை அதிகாரிகள் முகாரி இசைத்துள்ளனர்.

அதிகாரிகள் கூறுவதைவிட அதிகமாகவே, அமைச்சரும் கூறுகிறார்.

சென்னை மாகாண உணவு மந்திரி கனம் ரோச்விக்டோரியா அரிசியைப் பற்றி, அழுகுரலில் பேசியுள்ளார்.

அரிசியைப் பொறுத்த வரையில், உணவு நிலைமை திருப்திகரமாகவே இல்லை.

மந்திரியார், தமிழகத்தின் அரிசியியலின் அலங்கோலத்தை எடுத்துக் காட்டியுள்ளார்.

அவர் உணவு மந்திரி—அவர் நிர்வாகத்தின்கீழ் நகரவேண்டிய அரிசியியலின் சீர்குலைவை அவர் காட்டியுள்ளார்.

வெட்கமும், துக்கமும் ஆலவட்டம்தான் வீசுகின்றன, அவரது மந்திரி பீடத்தின் பின்னிருந்துகொண்டு! என்செய்வார்? உணவு இலாக்காவுக்கு அவர் மந்திரியாக இருக்கிறார். ஊரார் அவரை பட்டினி இலாக்கா அமைச்சரெனவே அழைக்கின்றனர்.

மத்திய ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் கனம் முன்ஷியாருக்கு அனுப்பப்படும் புள்ளிக் கணக்கு வேண்டுமானால் திருப்தி தருவதா இருக்கலாம். ஆனால், நாட்டின் ப இடங்களிலுள்ளதைப் பார்த்தா மிக மிக பயங்கரநிலையே வாட்டி கொண்டிருக்கிறது. இதனையறியா முன்ஷியார் மோகனம் பாடிவி கிறார் சிலசமயங்களில் என்கிறா சென்னை அமைச்சர்.

மத்திய ஆட்சிக்கு, உடன் தெ விக்கப்போகிறோம், சென்ன மாகாண மக்கள் அரிசியுணவுகொ பவர்கள், ஆகவே அவசரமா நிலையை ஆராய்ந்து அதிக அரி யனுப்பிவைக்கவேண்டும் என்று கேட்கப்போகிறோம் என்று வி டோரியா, வேதனை கலந்திருந்த தும், வீரம் தொனிக்கும் குரலி பேசியுள்ளார்!

உணவு இலாக்காவின் நடவடி கைகளை நகர்த்திடும் அதிகாரிகளு சோகமாகவே குறிப்புகள்தந்துள்ள னர்.

அவர்களின் மேல்பீடத்திலிருக் கும் மந்திரியாரும்,அவர்கள்சோகத் துடன் சேர்ந்து பாடியுள்ளார்.

நம்மிடம் கோதுமை அதிகமா வும், அரிசி குறைவாகவும் கையிரு பில் இருக்கிறது.

இப்பொழுது இந்த ஒப்பாரியினை நடத்துபவர் மாகாண முதல்மந்தி கனம் குமாரசாமி ராஜா.

அவர் தாம் எழுப்பிய சாவுகீதத் தின், பல்லவி பாடியதும், அனுப லவியை இப்படி ஆரம்பித்துள்ளா

சென்னை மாகாணம் எப்பொழு தும் பற்றாக்குறை பிரதேசம்.

யுத்தத்திற்கு முன்னாலும்கூட வெ நாட்டரிசி வந்துதான் காப்பாற்ற பட்டதாம்.

பிரிவினை வாரம் கொண்டாடுங்கள்

—✳✳✳—

17—9—51.ல், தி. மு. கழகத்தின் இரண்டாம் ஆண்டு முடிகிறது.

17—9—51-லிருந்து 23—9—51 வரை, நாடெங்கும் உள்ள நம் கிளைக் கழகங்கள், 'திராவிட நாடு பிரிவினை நாள்' கொண்டாட்டத்தை விமரிசையாக நடத்த வேண்டுகிறோம்.

வாரம் முழுவதும், திராவிட நாடு பிரிவினையை விளக்கிடும் பொதுக் கூட்டங்களும், இயக்க இலட்சியங்களை முழங்கும் ஊர்வலங்களும், நம் திட்டத்தை தினமும் தெரிவிக்கும் கொடிகளை ஏற்றிடும் விழாக்களும் நடத்த வேண்டுகிறோம்.

இயற்கை மோசம் செய்து விட்டது, இடையில்!

இப்படி அனுபல்லவிபோய், சரணம், கடைசியில் கோதுமைஏகாதிபத்தியத்திற்கு நிபந்தனையற்றசரணாகதியடையவேண்டும் என்று முடிகிறது.

அரிசி விரும்பாமல்,கோதுமையே வாங்கிக்கொள்வதானால் பதினாறு அவுன்ஸ் கொடுக்கவும் ஆட்சேபணையில்லையாம் அவருக்கு.

வேண்டாத பொருளை அளிக்க, எவ்வளவு, தாராளம் காட்டுகிறார் முதல் அமைச்சர்.

அரிசியியலின் போக்கினைக் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

அரிசியுண்பவர்களுக்குகோதுமை தருகிறேன் என்கிறார் முதல் அமைச்சர்.

அந்தக்கோதுமையைக்கொடுத்துவிட்டு, மத்திய ஆட்சியாளரிடம் அரிசி கேட்டுப் பெற்று தரமுடியவில்லை.

மத்திய ஆட்சியாளர் கண்டிப்பாக கோதுமைக்குப்பதில் அரிசிதர மறுத்துவிட்டதால்தான், முதல் மந்திரி, கோதுமை ஏகாதிபத்தியத்தின் தூதுவராகிறார்!

சிவில் சப்ளை அதிகாரிகள் மத்தளம் தட்டினர்! உணவு மந்திரி அதற்குப் பிடில் வாசித்தார்! முதல் மந்திரி முகாரி பாடினார்! இந்த அரிசியியல் கச்சேரிதான் நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது.

அரிசி கிடைப்பது மிகவும் கஷ்டமாகவே இருக்கிறது.

சென்னை மாகாண கவர்னர் பவநகர் இப்படி கூறியுள்ளார்.

இவர் தமது பேச்சில், உணவு நிலையைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது, இப்படி கஷ்ட நிலைமையைக்காட்டியுள்ளார்.

அரிசியியல் கச்சேரியில், கவர்னர் ஒரு பக்கவாத்தியமாகிறார்.

சென்னைமாகாணத்தின் நிர்வாகக் குன்றின்மீது நின்றுகொண்டுள்ள கவர்னர் பேசியுள்ளார், அரிசி நிலைமை மிகவும், துன்பந்தருவதாக இருக்கிறதென்று!

கவர்னர் காட்டியுள்ள கஷ்டம், முதல் அமைச்சர் முகாரி, உணவு மந்திரி ஓலம், சிவில் சப்ளை அதிகாரிகள் சிரமம், நம்நாட்டு அரிசியியல்!

இங்கே இருப்பவர்கள், கேட்கிறார்கள் இப்படி!

இங்கே இல்லாதவர் இந்நாட்டின் நிலையறியாதவர், டெல்லியிலேஇருப்பவர் கனம் முன்ஷி.

சென்னை, ஹைதராபாத், பீஹார் போன்ற இடங்களில் உணவு நிலைமை அபிவிருத்தி யடைந்து வருகிறது.

எதிர்காலத்தில், சென்ற ஆண்டிலிருந்ததுபோல இருள் நிறைந்திருக்காது.

மாகாணத்திலிருப்பவர்கள் கூறுகிறார்கள், நிலைமை சரியில்லையென்று!

ஆனால், டில்லி மந்திரியாரோ, நேர் விரோதமாகப் பேசியுள்ளார்!

டில்லி மந்திரியின் ஆசை அதுவாக இருக்கலாம். அதற்காக நாம் நன்றி செலுத்துவோம்! ஆனால் நிலைமை அவர் குறிப்பிடுவதுபோல அல்ல! அதனை நாம் எடுத்துக் காட்ட விரும்பியதைப் போலவே, சென்னை உணவு அமைச்சர் எடுத்துக் காட்டியிருக்கிறார்!

இத்தகைய அரிசியியல் குழப்பத்திற்குக் காரணம், நம் நிலை தெரியாத முன்ஷியிடம், நம் நாட்டு ஆட்சியாளரின் முடியும், பிடியும் சிக்கியிருப்பதால்தான் என்பதை நாம் கூறி வருகிறோம்.

நம் நாட்டு கனம்கள், இதனைக் கவனிக்காததுபோல நடிக்கிறார்கள்.

கனம்களுக்கு 'கைதூக்கி' ஊக்குவிக்கும் சட்டசபை உறுப்பினர்கள் பலருக்கு இதுபற்றிய கவலை இல்லை. சிலருக்கு, இந்த பொல்லாப்பு நமக்கேன் என்று, சட்டசபையுண்டு, அருமை நாற்காலியுண்டு, அதில் தூங்குவோம் நாளும், நன்றாகஉண்டு! என்று இருந்து வருகின்றனர்.

இவர்களை அனுப்பிவைத்த கட்சி வீரர்களோ, நம்மைத் தூற்றலால் துளைத்து, ஏசலால் புதைத்துவிட முனைகிறார்கள்.

நாம் இவைகளைத் துச்சமெனத் தள்ளித்தான் நம் இலட்சியப்பாதையிலே நடக்கிறோம்.

முன்ஷி—விக்டோரியா ஒட்டாத ஜோடிகள்!

மனப் பொருத்தமில்லாத இவர்களை மணம் முடித்து வைத்தால், குடும்பத்தில் குமுறலும், குழப்பமும் எழும்பாமல் எப்படியிருக்கும்?

அப்படி ஏற்பட்ட குழப்பந்தான் நம் நாட்டு அரிசியியல்.

அரிசியியல், வளர்ந்து வரும் பயங்கரம்.

அரசியலில் ஆனந்தசுந்தரர்களாக உலவுபவர்கள், முதலில் இதனை அலட்சியமாகத்தான் கருதுவார்கள். ஆனால், அதன் முடிவு எங்கே கொண்டுபோய்விடும் என்பதை உணர்ந்து பார்த்துக் காரிய மாற்ற வேண்டும்.

முன்ஷியார்மோகனம்பாடுவதும், விக்டோரியா, முகாரி பாடுவதும், ஒரே நேரத்தில் நடக்கிறது.

இதுதான் இந்நாட்டு அரிசியியல்! இந்த நிலை அரசியலில் ஏற்பட்டுள்ள களங்கம். இக் களங்கம் களையப்பட வேண்டும் என்பதே நம் ஆசை. இக் களங்கங்கள் வளர வளர, நம்இலட்சியப் பாதையிலே அனைவரும் வருவர் என்பதே, அரிசியியல் கணிதத்தைக் கொண்டு, நாம் கணிக்கும் அரசியல் ஆரூடம்!

8-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் இந்த மாஜிப் பிரமுகர்களோ, தயாபரனைக்காப்பாற்ற தயவு செய்து கவனம் செலுத்துங்கள் என்று சர்க்காருக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள்.

பலவருடங்கள் கஷ்டப்பட்டு ஆயிரமாயிரம் கொத்தரும் ஆட்களும் சிரமப்பட்டு கட்டிய கோயில்கள் வீணாக்கப்படுவது வேதனைதான் நமக்குக்கூட — வேறுநல்லகாரியங்களுக்காக உபயோகப்படுத்தவேண்டிய இடங்கள் நாசமாவது நல்லதல்லவே என்பதால்.

ஆனால் இந்த நாசத்தைப் போக்க, ஒருபக்கம் பக்தியாமிர்தத்தைப் பஜனை செய்துகொண்டு, இன்னொரு பக்கம் பரமனைக் காக்க விண்ணப்பம் போடுகிறார்களே சர்க்காருக்கு என்பதை எண்ணும் போதுதான் நமது சிந்தனை குழம்புகிறது.

'எல்லாம் வல்லானை'க் காக்க இந்த இகலோகவாசிகள் முயற்சிக்கின்றனர். கேவலத்திலும் கேவலம்! கடவுள் சக்திக்கே களங்கம் கற்பிக்கின்றனர்!!

★ மாஜிகள் கூத்து! ★

★

"அம்மையே அப்பா! கந்தா! கடம்பா! கஞ்சி காமாட்சி! மதுரை மீனாட்சி! காசி நாதா! கங்காதரா! லக்ஷ்மி சமேதா! நாகராஜா!" என்று பக்தர்கள் கூக்குரலிட்டதும், தத்தமது வாகனங்களேறி, பூலோகம் புறப்பட்டு, சித்துபல புரிந்தனர் நமது கடவுளர் என்று செப்புகின்றன—நமது புராண ஏடுகள். அவைகளைக் கையிலேதாங்கி, மற்றோர் கையிலே ஜாலரா ஏந்தி, நித்தநித்தம், பாகவதா காலேட்சேபங்களும், பக்திமதப் பிரச்சாரங்களும், ஆங்காங்கே நடைபெற்ற வண்ணமும் உள்ளன.

"நாஸ்தீகம் பரவிவிட்டது, நாம் சும்மா இருக்கக்கூடாது!" என்ற வீராவேசத்தோடு மடாதிபதிகளும் மார்க்க பூபதிகளும், நீதிபதிகளும், மோனநிலை பெற முனைந்துவிட்ட தர்ம தாதாக்களும், பண உதவியும் ஆள் உதவியும் தந்து, அம்மை அப்பன் புகழ் பரப்ப, பற்பல வழிகளிலும் பாய்ந்தோடிக்கொண்டுள்ளனர். பக்தியாறு பாய்ந்தோடி துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்ய இந்த பக்தர் குழாம் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே தான் புதுச் செய்தி யொன்றைக் கேள்விப்படுகிறோம்.

மாஜி எம். எல். ஏ. மாஜி மேயர் சாமி வெங்கடாசலம்,

மாஜி மந்திரி கே. பாஷ்யம்,

அகில இந்திய மிதவாதத் தலைவர் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி,

மாஜி மேயர் ஜானகிராம் செட்டியார்,

திருவாங்கூர் மாஜி பிரதம நீதிபதி டி. எம். கிருஷ்ணசாமி அய்யர்,

சென்னைஜில்லா காங்கிரஸ்தலைவர் டி. செங்கல்வராயன்,

ஜஸ்டிஸ் (!) கட்சி பொதுக் காரியதரிசி கே.வி. சுப்ரமணியசெட்டியார்

சென்னை வக்கீல் எஸ். ரங்கநாத முதலியார்,

லெப்டினன்ட் கர்னல் (மாஜி I M.S.) டி. எஸ். எஸ். சாஸ்திரி.

முதலிய, பலமாஜிகள் ஒன்றுகூடி, விண்ணப்பம் ஒன்று தயாரித்து சர்க்காருக்கு அனுப்பியுள்ளனராம். சர்க்காருக்கு என்றால் சென்னை சர்க்காருக்கல்ல—டில்லிக்கு!

பல முனைகளிலே உள்ள இந்த மாஜிகள் ஒன்று கூடினர், டில்லிக்கு கோரிக்கை விடுத்தனராம் என்றால், ஏதோ அதிமுக்யத்துவம் இருக்க வேண்டும் என்றே எண்ணுவர் எவரும்.

மக்களுரிமை பறிபோவதைப்பற்றிக் கண்டித்திருக்கலாம், அல்லது நால் பிரச்சினை—துப்பாக்கியும் தடியும் தாண்டவமாடுதல் நல்லதல்ல என்ற கண்டனம், இப்படி ஏதாவது இருக்கலாம் என்றே கருதுவர் — மாஜிகள், அதுவும் பலதிறப்பட்டவர், ஒன்று கூடி விண்ணப்பம் அனுப்பினார் என்பதைக் கேள்விப்படும்போது!

ஆனால், அந்த விண்ணப்பம், இந்த விவகாரங்களைப்பற்றியதுமல்ல! கேவலம், இதெல்லாம் இக லோகப் பிறவியைப் பற்றியதல்லவா அவர்கள் பெரிய மனுஷர்களாயிற்றே—சாதாரண மக்களைப் பற்றியா எண்ணுவர்? அதற்கு நேரத்தை ஒதுக்க அவர்களாலா இயலும்? ஆகவேதான், இந்த மாயப்பிரபஞ்சத்தைப்பற்றி கவலைப்படாது பரலோக விவகாரங்கள் பற்றி, மேலிடம்—அதாவது டில்லி; மேலுலகமல்ல! — நோக்கி, விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த ஓராண்டில் 36-இந்துக் கோயில்களை பாழடைந்து விட்டனவாம்—திருவாங்கூரில்.

ஒரு கோஷ்டியினரின் துராக்கிரமச் செயல்களே அதற்குக் காரணமாம்.

"இதைத் தடுங்கள் — எங்கள் நெஞ்சு துடிக்கிறது. அகில இந்திய சனாதனிகளும் திடுக்கிட வேண்டிய காரியம் இது—சர்க்காரே, காப்பாற்றுங்கள்" என்று, பதட்டத்தோடு, விண்ணப்பம் அனுப்பியிருக்கின்றனர்.

மாஜிகள், மகேசுவரனுக்காக, சர்க்காருக்கு வேண்டுகோள் அனுப்பியிருக்கின்றனர்!

கடவுளரைக் காப்பாற்ற, இந்த பிரமுகர்கள், விண்ணப்பம் போடுகிறார்கள்.

பக்தர்கள் குரலைக் கேட்டால் கருடவாகனமேறி, காளை வாகனமோ ஏறிவந்து காத்தருளினர் கடவுளர் என்று கூறும் புராணங்கள்—நிரம்ப இருக்கின்றன.

அவைகளை அட்சர அட்சரமாகப் பெயர்த்தெடுத்து பதவுரையும் பொழிப்புரையும்தந்துகொண்டுள்ளனர், காலேட்சேபங்கள்மூலம்—பல பக்தர்கள்.

கடவுளரின் புகழ்பரப்ப பணம் படைத்தோரும், மாஜிமந்திரிகளும், மடாதிபதிகளும் ஏற்பாடு செய்த வண்ணமே உள்ளனர். அதுவும் சாதாரணமாக அல்ல, பிரச்சாரகர்களை நியமித்து அவர்கள் செல்ல 'மோடார்வான்' வாங்கித்தந்து!

பக்தர் பஜித்தால் ஓடோடிவருவர் என்று புராணங்கள் செப்பும் புவனேஸ்வரர்களின் புகழ் பரப்ப, அவர் தம்பெருமையைக்காக்க, மதச் செல்வாக்கும் பண பீரங்கியும் முழங்குகின்றன.

ஆனால் ஆஸ்திகம் அலறும்படியான செயல்-நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அம்மை அப்பன், என்னடா என்கோயிலை இடித்தது" என்று கேட்க வரவில்லை. "இதோ பார்!" என்று நெற்றிக்கண் திறக்கப்படவில்லை. அய்யப்பனுரின் விரட்டலோ, சக்ராயுதங்களின் பாய்ச்சலோ 'இந்தப் பாதகமான' செயலில் ஈடுபட்டோரை நோக்கிப்புறப்படவில்லை.

கடவுளர், தமது கோயில்கள் எக்கேடு கெட்டால் என்னவென்றே இருக்கின்றனர் — 'எங்கும் நிறைநாத பிரம்மம்' ஆகிய நமக்கு எனிந்த நற்கோட்டை என்ற எண்ணம் போலும்!

ஈசனுக்கே, கவலை பிறக்கவில்லை கையிலே வேலிருக்க, கர்ஜனை எழுப்பும் பூதகணங்கள் இருக்க, திரிசூலமும்தண்டாயுதமும் தயாராயிருக்க, சர்வேசுவரன் சிறிதும் சஞ்சலம் அடைந்ததாகத் தெரியவில்லை.

7-ம் பக்கம் பார்க்க

தொடர்கதை

★ யாத்திரை ★

4

பார்த்திபனுக்கு

தினகரன்

அவன் அழுகை—செத்து போனதற்காக அல்ல, வாழ்க்கைச் சிக்கலைத் தீர்க்க முடியாமல் போனதற்காக! அவன் தந்தையைத் திருப்தியுடன் சாக விடவில்லையே என்ற தாங்காத துயரால்!

கடமை—அதுதான் அந்த வழக்கிற்கே அடிப்படைக் காரணம். தந்தைக்கு மனைவியைப் பிடிக்கவில்லை. மனைவிக்கோ தந்தையைஅன்போடு ஆதரிக்கத் தெரியவில்லை — அந்த ஆசையிருந்தாலும்! ஏகாம்பரம் இந்த சிக்கலுக்கிடையில்—இருதலைக்கொள்ளியிடையே எறும்புபோல! தந்தையின் எண்ணத்தை ஈடேற்றுவிட்டாலும் கடமை தவறியவனாகிறான். மனைவியுடன் வாழாவிட்டாலும் உலகின் பரிகாசப் பார்வைத் தீயில் பட்டுச் சாம்பலாகிறான்! கடமையா அது, அவன் கழுத்தை வெட்டிச் சாய்க்க வந்த கட்டாரியா?

ஏகாம்பரம் சிந்தித்தான். தந்தை நாளைச் சாகப்போகிறவர். மனைவியோ வாழப்பிறந்தவள். அவள் வாழ்வு அரும்பு — அதைக் கருக்கிவிட்டு, பழுது இலைபோன்ற தந்தையாரின் வாழ்வைச் செழிக்கச்செய்ய முயலவில்லை. கடமை தலை குனிகிறது. காலம், சந்தர்ப்பம் தலைதூக்கி பாடுகிறது.

ஏகாம்பரம் கடமையின் பெயரைச் சொல்லி வாழ்வைப் பாலைநிலமாக மாற்றிக் கொள்ளவில்லை! அவனை வாழ்த்துங்கள்..... வழக்கில் தோற்றுவிட்டாலும், வாழ்க்கையில் வெற்றிகொண்ட நல்வீரன் என்பதையெண்ணி!

உலகை சரியாக உணர்ந்து கொள்ளாத பெருங் குற்றத்தால் தாங்கள் அஞ்சிஅஞ்சி சாவதாக அறிகிறேன். வருந்துகிறேன்.

இந்த உலகம் பொல்லாதது—புரிந்து கொள்வது கடினம், புரிந்துகொண்டவர்களிடம் அடங்கிவிடும் என்பது உண்மை!

நான் ஒரு அன்னக்காவடி. — ஆனால் சத்திரம், சாவடி கட்டிப் பிச்சை கொடுத்துப் பெரிய மனிதராகப் போகப் 'பகீரதப் பிரயத்தனம்' செய்யும் தர்மவான்கள், தனவந்தர்கள், கொடையரசர்கள் என்னைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

தில்லை—வில்லாளன்

எப்படி? பணம் இருக்கலாம் அவர்களிடம்—அதைப் பயன்படுத்திடும் முறை தெரியாதே அவர்களுக்கு! ஆகவே ஓடிவருகிறார்கள் என்னிடம். ஆனால் அந்த நிலையை உண்டாக்கிக்கொள்ள நான்போட்டபகல் வேடங்கள் நாடக நகைச்சுவைப் பகுதிகளுக்கு தக்கவை, ஏற்றவை!

. அன்று தாங்கள் வந்தீர்கள். உங்களை முன்பின் தெரியாதவன் நான். என் பேச்சிலே அப்படியே அடங்கிவிட்டீர்கள் அல்லவா? உங்கள் காரில் இரண்டுமுறை வரச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக்கொண்டேன், முதலில் 'மொக்கத்தனம்' அடைந்தாலும்!

யாருடைய நோட்டுகளையோ நானே எடுத்துக்கொண்டு சில்லரை வாங்கிக் கொடுப்பதிலே எனக்குத் திருப்தி—அத்தோடு இலாபமும் இருக்கிறது! ஏனெனில் அந்த வட்டிக்கடை வரகுண செட்டி இப்பொழுது கைமாற்று கேட்டாலும் தருகிறானே!

வெளுத்த சட்டையும், தரையிலே புரளவிட்டுக் கட்டும் வேட்டியும், இரவல் 'வாட்சும்' கடன் கணக்கில் வாங்கிய மோதிரமும், காகித குப்பை நிரம்பிய 'பர்சும்' பெறுகிற மதிப்பு சொல்லுந் தரத்ததோ! நாலு 'கோண எழுத்து' தெரிந்துவிட்டால் போதும். அதற்காகவே பாடுபட்டு நான்கைந்து ஆங்கிலச் சொற்களைக் கற்றுக் கொண்டேன். ஆமாம், இல்லை, மன்னியுங்கள், மிகைப்படுத்த வேண்டாம், வருந்துகிறேன்......இப்படி பொருள் தருகிற ஆங்கில வார்த்தைகள் எனக்கு 'அத்துப்படி' இவைகளை வைத்துக் கொண்டு ஆட்டி வைக்கிறேன்!

இன்று ஏமாற்றத் தெரிந்தவனே ஏற்றமடைகிறான். சூழ்ச்சி செய்கிறவன் சுகமடைகிறான். வஞ்சகம்புரிகிறவனே வாழ்கிறான். சூது புரிகிறவன்மன மகிழ்கிறான். ஆகவேதான் நான் கொஞ்சம் மற்ற மக்களிடமிருந்து விலகி நிற்கிறேன்—சற்று விழிப்போடு, விபரந் தெரிந்ததால், விளக்கம் பெற்ற

ஓடிய கதை

பத்மாவை இழந்த சுந்தரம், வாழ்வையே வெறுத்து, பொதத் தொண்டே, இனி வாழ்வின் இலட்சியம் என பணிபுரிந்து வருகிறான்.

பத்மாவோ, பார்த்திபனை மணந்து, வாழ்விலே இன்பங் காணாது தவிக்கிறாள்.

பார்த்திபனோ, பொன்னியிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டு மனைவி பத்மாவிடம் பொய்நேசங் காட்டிவருகிறான். பொன்னி கருவுறுகிறாள், ஆகவே விஷயம் வெளியாகிறது. பத்மா புரட்சிகரமான பரிகாரந்தேடுகிறாள். பொன்னியைத் தன் கணவனுக்கு மணம் முடித்து வைத்துவிட்டு, மருத்துவ படிப்புக்கென காரணங்கூறி வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.

பத்மாவின் தங்கை லீலா, தன்சாதலை இராமன் என்ற வாலிபனுக்கு காணிக்கையாக்குகிறாள்.

அவள் தோழி மங்கை தினகரன் என்ற தெகிடுதத்தக்காரனால் கற்பழிக்கப்பட்டு, அதன்பின் பள்ளியாசிரியையாகவே காலங்கழித்து வருகிறாள்.

பார்த்திபன், இராமனது வழக்கிற்குப் போய் வாதாடி வெல்கிறான்.........

தால் விரிந்த மனத்தோடு!

ஒழுக்கம் என்று சொல்கிறார்கள். எதைச் சொல்கிறார்களோ நான் அறியேன். ஆனால் நான் உலக வரம்பிட்டிருக்கும் ஒழுக்கத்தைத் தாண்டிப் போயிருக்கிறேன். ஆனால் அது எனக்குத் தெரியும். நான் ஒழுக்கத்திலிருந்து வழுக்கி விழுந்த பொழுது என்னுடன் தவறிச் சருக்கி விழும் 'பத்தினி ரத்னத்திற்கு' வெளிச்சம் .... மற்றவர்களுக்கு நான் யோக்கிய சிகாமணி, ஒழுக்க சீலன்! இப்படித்தான் உலகில் பலர் ஒழுக்கங்கெடாத உத்தமர்களாக இருக்கிறார்கள். இருட்டறை ஒழுக்க ஹீனர்கள், வெளிச்சத்தில் ஒழுக்க சிகாமணிகளாக மாறிக் கொள்கிறார்கள்!

தாங்கள் சினங்கொள்ளக் கூடாது. உண்மையைச் சொல்கிற பொழுது கோபம் வருவது அறிவிலிக்கு இயல்பானது; தாங்கள் அறிவாளியென்பது நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை! நீங்கள் போலி ஒழுக்கத்தில் நம்பிக்கை வைத்தால் இன்னமும் அழுகிறீர்கள்.

இப்பொழுது திடுக்கிடும் உண்மையொன்று சொல்லப் போகிறேன். ஆச்சர்யத்தால் மூச்சிழந்து விடமாட்டீர்களே! நீங்கள் இப்பொழுது இரண்டாவது மனைவியாக ஏற்றிருக்கிற பொன்னி என் தங்கை. நான் தங்கள் மைத்துனன். திடுக்கிட்டு விட்டீர்களா?...கொஞ்சம் இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு இன்னொரு 'புதுக் காடி'யையும் அறிந்து கொள்ளுங்கள். அவள் இன்று உங்கள் மனைவி—சட்டப்படி! ஆனால் உண்மையில் அவள் உங்கள் தங்கை—இரத்த முறைப்படி! அது திரையிடப்பட்ட உண்மை!

ஒழுக்கத்திற்குக் கட்டுப்பட்டு மூடிவைத்தீர்களே, அந்த செய்தியிலே எவ்வளவு அழுகிய உண்மைகள் துர்நாற்றமடிக்கின்றன பாருங்கள்! முதல் மனைவியின் 'வானப்பிரஸ்தம்' எதன் அடிப்படையில்? மருத்துவமாதாகவா? மனதிலே உங்களுக்கு முன்னமே இடம்பிடித்த மன்மதனைத் தேடவா? சிந்தியுங்கள்.

நான் புதிர் போடவில்லை—விளக்கமாகவே சொல்கிறேன்...என் தாய் உங்கள் வீட்டு வேலைக்காரியாக அமர்வதற்கு முன்னாலேயே இலங்கைக்கு ஓடிவிட்டேன். பத்தாண்டுகள் கழித்தே வந்து சேர்ந்தேன். பிறகு என் தாயின் கதையை அறிந்து அவளைப் பார்க்காமலேயே இருந்துவிட்டேன். என் தாய் ஒழுக்கங் கெட்டவள் என்பது எனக்குத் தெரியும். தவறு அவள் மீது மட்டும் இல்லை, என் மீதும் உண்டே! நான் அவளை விட்டோடியிராதிருந்தால் அவள் அன்பானந்தரின் பசிக்குஉணவாகிடத்தேவையில்லை.

அன்பரே, பொன்னி அன்பானந்தருக்குப் பிறந்தவள் — உம் தங்கை, இப்பொழுது புரிகிறதா? உம் தந்தை முதலில் மறுத்தார். அப்பொழுது மனச்சாட்சி அதிக வேலை செய்தது. பிறகு திருட்டுக் காமத் திருவிழாவுக்கு யோசனை தந்தார். அப்பொழுது சந்தர்ப்ப வாதம் தலைவிரித்தாடிற்று! பிறகு தான் தங்களுக்கு நெஞ்சுரம் பிறந்தது—அதுவும் பெண்ணைப் பிறந்த ஒரு பிடிவாதப் பிம்பத்தினால்! பத்மாவைமட்டும் நன்றாகப் புரிந்திருப்பீரேயானால் இந்தத் தவறு செய்திருக்கமாட்டீர்கள். தங்கையை மணந்து மகிழ்ந்திருப்பீர்கள். என்ன இப்படிக் கொஞ்சமும் தடுமாற்றமின்றி தங்கையைத் தாரமாக்கிய தடித்தனத்தைச் சரியானது என்று கூறுகிறீரே என்று கேட்கத் தோன்றும்! ஆம், சொல்கிறேன்... உலகம், சூது என்ற அச்சாணியில் சுழன்று வரும் சகடமாக இருக்கும் பொழுது தாங்கள் எதிர்த்துப் போராடி என்ன செய்வது! மனச்சாட்சி மறுக்கிறதே என்பீரானால் மனச்சாட்சியைப் பிணமாக்கிடக் கற்றுக்கொள்ளுங்கள், மனச்சாட்சி சண்டி மாடு — அது ஓடும் பாதையோ நல்லெண்ண மேக மலைகளுக்கிடையே, நற்செய்கையெனும் வளைந்து வளைந்து செல்லும் கணவாய்ப் பாதையிலே, விசித்திர விஷப் பரிட்சைகள் என்ற வர்ண வேடிக்கைகள் செய்யும் வான வில்லாய் அடிப்படைமீதே, உன்னத ஒழுக்க முடிவு எனும் அடிவான இடந்தேடி ஓடிக்கொண்டே இருக்கும்; இடையே சண்டித்தனம் வந்துவிட்டால் படுத்துவிடும். பிறகு வாலைக் கடித்தாலும் எழுந்து நடக்காது. புகை போட்டுக் கிளப்பினாலும் போகுமிடத்தை நாடிச் செல்லாது!

பொன்னி தங்கை — திரையை விலக்கினால்! அதை யார் கிழித்தெறியப்போகிறார்கள்? தங்கள் தந்தைக்கு அந்தத் தைரியம் இல்லாத போது வேறு யாரால் முடியும்? எனக்குத் தெரியும், ஆனால், தங்களை துயரத் தெருவில் தூரத்தியடிக்க விரும்பவில்லை. இல்லாவிட்டால் இந்தச் செய்திகளை அம்பலப்படுத்த 'வாயாடி' பத்திரிக்கையாசிரியர் வம்படி வல்லத்தரசுக்கு அனுப்பியிருப்பேன்!

பத்மாவும் எனக்கு தெரியாதவள் அல்ல! இராமனுடன் ஏற்படுத்திக் கொண்ட புதுத் தொடர்பால் ஒரு பயங்கரப் படுகுழியிலிருந்து விடுபட முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறேன்: இராமன் படிப்பிலே நாட்டமில்லாது, பயங்கர இயக்கத்திலே ஆர்வங்கொண்டு திரியும் இரத்தத் துடிப்பு மிதமிஞ்சியுள்ள வாலிபன், அவனால்தான் உங்கள் 'மாஜி' மனைவி—தற்கால மருத்துவ மாது பத்மாவைப்பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது.

(தொடரும்)

விளம்பர விகிதம்

★

கலம் அங்குலம் 1-க்கு ரூ. 4—0—0

அரைப் பக்கம் ரூ. 100—0—0

முழுப் பக்கம் ரூ. 200—0—0

* விளம்பரங்கள் அனுப்பும் முன் எழுதிக் கேட்டு பிறகு அனுப்பவும்.

* முன் பணத்துடன் அனுப்பப்படும் விளம்பரங்களே கவனிக்கப்படும்.

* விளம்பரங்களின் விஷயம், அளவு, காலம் இவற்றை அனுசரித்தே ஏற்றுக்கொள்ளப்படும்.

விளம்பர மானேஜர்.

பிணத்தின்மீது பணம்

★

வீண் சடங்குகளில், அர்த்தமற்ற சம்பிரதாயங்களில் பணத்தைக் கொட்டியழுகிறார்கள்.

அர்த்தமற்ற விழாக்களில் அவசியமில்லாது, பொருளைப் பாழாக்குகிறார்கள்!

பழைய நம்பிக்கைகளின் பேரால் செய்யப்படும், சடங்குகள் பல, வெள்ளிப் பணங்களை விழுங்கி விடுகின்றன.

திருமணம் என்று விருந்தும், விழாவும் செய்து, வெள்ளி வெள்ளியாக கொள்ளை போகிறது, நம் நாட்டில்!

ஈமச்சடங்கு. இதற்குக்கூட, அனாவசிய செலவுக் கணக்கு!

என் தாய் இறுதிச் சடங்கிற்கு, இருபதாயிரம் வெள்ளி ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது

இறந்து போகும் என்தாய்க்கு — ஏன் இவ்வளவு வெள்ளி வீணாக்கப் படவேண்டும்? இப்படிக் கேட்பதால், தாயிடம் எனக்கு அன்பில்லையென்று அர்த்தமில்லை. தாயிடம் பாசம் அதிகம். அதனால் தான் அவரின் பெயரால் ஒரு பெருந்தொகை பாழானது என்ற பழி வரக் கூடாதென்பதற்காக, அந்தத்தொகையைப் பிரித்து கல்வி ஸ்தாபனங்கள் பலவற்றிற்கும் கொடுக்கத் தீர்மானித்து விட்டேன்.

சிங்கப்பூர் சீமான், சீனக் குடும்பத்தைச் சேர்ந்த ரப்பர் வணிகன் லிம் சாய் வீ என்பவர் இப்படிக்குறிப்பிட்டு, அதன்படியே, பிரித்தும் கொடுத்தார்.

அவர் சீனச் சமூகத்தின் சிறுமதிச் சடங்குகளைக் கடிந்துகொண்டுள்ளார்.

அந்தச் சமூகத்திற்கு எந்த வகையிலும் இளைத்ததல்ல நம் சமூகம்!

அர்த்தமற்ற சடங்குகளால் சீனச் சமூகம், குற்றுயிராய்க் கிடக்கிறதென்றால் நம் சமூகம், செத்துவிட்டதென்றே கூறவேண்டும்!

அர்த்தமற்ற சடங்குகளை காணவேண்டுமானால், வைதீகபுரியார் நடத்தும் திருமணங்களைப் பாருங்கள்.

செத்துப்போனபிறகு, பிணத்திற்குச் செய்யும் இழவுச் சடங்குகளைக் கவனியுங்கள்.

உயிரோடிருக்கும் பொழுது ஏதும் செய்ய மாட்டான். செத்த பிறகு அவன் செய்யும் சடங்குகளைப் பார்த்தால் சகிக்க முடியாது!

அதுபோலவே விழா கொண்டாடுவதும், அர்த்தமில்லா முறையில், ஆனால் ஆயிரக்கணக்கான செலவில் செய்வான்!

கம்பசேர்வையென்பான், கலனை கோயில் திருப்பணி யென்பான், கார்த்திகை தீபம் என்பான், காணிக்கைச் செலுத்த திருப்பதி செல்வேன் என்பான் — ஏதாவது கூறி, இருக்கும் பணத்தை உருப்படாத வகையில் கரைத்துவிடுவான்.

மனிதனுக்குச் செய்யும் சடங்குகளும், சம்பிரதாயங்களும் கிடக்கட்டும். மகேசனுக்குச் செய்கிற தடபுடல் தர்பார், இந்நாட்டுப் பொருளாதாரத்தையே முடமாக்கி விட்டது!

மலாயாவிலுள்ள சீனக் குடும்பத்தவர் ஆண்டொன்றுக்கு பத்து லட்சம் வெள்ளியைப்பாழாக்குகிறார்கள் என்று கணக்கிடப்படுகிறது!

லிம், அழகாகக் குறிப்பிடுகிறார்— இறுதிச் சடங்கிற்கு அந்தத்தொகை செலவிடப் படாமல், கல்வி நிலையங்களுக்குச் செலவிடப் பட்டதால், இறந்த தாயை அதிக கௌரவம் செய்ததாகவே இருக்கிறது என்று!

ஆம், அத்தகைய லிம்கள் ஏற்பட வேண்டும் நம் சமூகத்தில்!

அப்பொழுது தான் புரோகிதர் புலம்பல், புராணப் பிரசங்கியின் ஓலம், சடங்குகளின் சங்கடம்,தேர், திருவிழா, திருவாதிரை, துவாதசி, அமாவாசை என்ற அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்கள் அடங்கும்!

பிணத்தின் மீது பணத்தைக் கொட்டிப் பாழாக்குவானேன் என்று கேட்டிடும் லிம்கள் நமக்கு தேவை!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

ரஷ்யா இவர்களுக்குப் பகை நாடல்ல!

இன்னமும் ரஷ்யா உணவளித்து உதவி வருகிறது!

ரஷ்யப் பிரதிநிதி இங்கேயும், இந்தியப் பிரதிநிதி அங்கேயும் இருக்கின்றனர்! என்றாலும், அனுமதி மறுத்துள்ளனர்.

ஜார் நாடு கடத்தினான்! நேரு, நாடு கடந்து செல்லாதே என்கிறார்!

மத்திய ஆட்சி இதனைச் செய்துவிட்டு, மாகாண ஆட்சியாளர்களுக்கும் மறைமுக உத்திரவிட்டு விட்டு ஒன்றுந்தெரியாது போலப் பேசுகிறதுதான் வேடிக்கை!

* * *

திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசனும் சட்ட திட்டக்குழுச் செயலாளர் கே. ஏ. மதியழகனும் இலங்கைசெல்ல அனுமதி கோரியிருந்தனர்.

அவர்களை அழைத்து எல்லா விசாரணையும் நடத்தினர்.

கடைசியில் அனுமதி மறுத்து விட்டனர்.

காரணந் தெரியவில்லை· ஆனாலும், இலங்கை செல்ல முடியாது!

மாகாண ஆட்சி மத்திய ஆட்சியைக் காட்டுவது, மத்திய சர்க்கார்மாகாண சர்க்காரைக் காட்டுவதுமாக,கண்ணாமூச்சு ஆட்டம் போடுகிறார்கள். இது விஷயத்தில்!

இலங்கையும், இந்தியாவிற்கு எதிரிகள் நாடில்லை.

தோழர்களும் பெரும் பயங்கரத் திட்டத்தை ஏந்திச் செல்லவில்லை.

ஆனாலும், அவர் இலங்கை செல்லக் கூடாதெனக் கூறிவிட்டனர்!

இந்தக் கொடுமையைக் காணும் பொழுது தான் நமக்கு நேருவை ஜாரைவிடக் கொடுங்கோலர் என்று கூறத் தோன்றுகிறது!

இந்திய ஜார் நேரு—இப்படி மக்கள் கூவிடுகின்றனர்!

நாடு கடத்துவதைவிட, நாடு கடந்து செல்லாதே என்பது மிக மிக கண்டிக்கத்தக்கது!

ஜார் செய்யாததை, நேரு செய்கிறார்! இதைக் கருத்துள்ளோர் கண்டு, கண் கலங்குகின்றனர். ★

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு.

சென்னையில்

விரைவில் நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

★ மாநில மாநாடு மகத்தான சம்பவம்!

★ கழக வரலாற்றிலே புதிய பொன்னேடு!

★ நாட்டை மீட்கும் திட்டம் தீட்ட
தக்கதோர் முயற்சி!

வாரீர் வீரர்காள்! திரண்டு வாரீர் திருஇடம் காண!

★ பாதை வகுத்திட வாரீர்!

★ பாசறை அமைத்திட வாரீர்!

மாநில மாநாடு, கொள்கைப் பற்று எனும் செல்வம் குறைவறக்கொண்டவர்களின் கூட்டு முன்னணி!

நாம் அரசியல் பட்டுப் பூச்சிகள் அல்ல! பதவி நாடும் வெட்டுக்கிளிகளும் அல்ல!
கொள்கைக்காக உழைக்கும் வீரர்கள்.

அவ்வீரர் கோட்டம் அமைக்க விரைந்து வாரீர்!

வாரீர் மாநில மாநாட்டுக்கு! வழங்குவீர் உழைப்பை!!

விளம்பரக் குழு,
தி. மு. கழக மாநில மாநாடு

Edited, Printed & Published by C. N. Annadurai M. A at "DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.